1970 ஆகஸ்ட் 25]

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், பஸ் பர்மிட்டுகள் வழங்குவதில், சாதாரண மக்கள் ஒன்று சேர்ந்து ஒரு லிமிடெட் கன்சர்ன் அமைத்துக் கொண்டு, பஸ் ரூட்டுக்களை வழங்கும்போது, இதற்கு பண செக்யூரிடி கொடுப்பதில், இருக்கக்கூடிய ஒருவர், குறிப்பிட்ட ஒரு நபர் கட்டினாலும் போதும் என்று இருந்தது. ஆனால், இப்பொழுது, லிமிடெட் கன்சர்ன் என்ற அந்தப் பெயரில் கட்டினால் தான் கொடுக்க முடியும் என்று ஆறு மாதமாக தடங்கள் வழங்குவது தடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, இது சம்பந்தமாக இப்பொழுது என்ன சொய்யப்படுகிறது என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதுபோன்ற புகார்கள் அரசாங்கத்திற்கு வரவில்லை. மேட்டார் வெஹிகிள்ஸ் சட்டப்படி, 155-ஏ என்ற பிரிவுப்படி, சில விதிமுறைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கூறுகிறோம். கனம் உறுப்பினருக்கு ஏதாவது தகவல் இருந்து, தனியாகக் கேள்வி கேட்டால் பதிலளிக்கலாம்.

Coimbatore—Bangalore Highway.

* 22 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have any proposal to remodel the Coimbatore—Bangalore Highway;

(*b*) if so, the details thereof and the estimated cost;

(*c*) whether the Government have sought the help of the World Bank; and

(*d*) if so, the share of the World Bank and the State Government?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) மைசூர் எல்லை — கிருஷ்ணகிரி — சேலம் வழியாகச் செல்லும் 7-ஆம் எண். தேசிய நெடுஞ்சாலையையும், சேலம், கோயம்புத்தூர், கேரள எல்லை வழியாகச் செல்லும் 47 ஆம் எண். தேசிய நெடுஞ்சாலையையும் மேம்படுத்துவதற்காக உலக வங்கியின் உதவியை நாடுவதற்கு வகை செய்யும் செயற்குறிப்பை இந்திய அரசு பரிசீலனை செய்து வருகிறது.

(இ) தற்போதுள்ள சாலை அமைப்பை விரிவுபடுத்துதல், வலுப்படுத்துதல், வலுவற்ற, குறுகிய பாலங்களையும் சிறு பாலங்களையும் புதுப்பித்தல், தற்போதுள்ள சாலை, இருப்புப்பாதைக் கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலங்களைக் கட்டுதல், நெரிசல் மிகுந்த நகரங்களுக்கு பக்கச்சாலைகளை அமைத்தல், சாலை அமைப்பு வடிவவியலை மேம்படுத்துதல் ஆகியவை மேம்பாட்டுப் பணிகளில் அடங்கும். 7-ஆம் எண். தேசிய நெடுஞ்சாலைக்காக ரூபாய் 430 லட்சம் அளவிலும், 47-ஆம் எண். தேசிய நெடுஞ்சாலைக்காக ரூபாய் 325 லட்சம் அளவிலும் நடைமுறைச் சாத்தியமான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

(உ) உலக வங்கியின் உதவி பெறுவதற்காக இந்திய அரசின் ஆலோசனையிலே இருந்து வரும் பல திட்டங்களில் இது ஒன்ருகும். இந்திய அரசினுல் இது முடிவாகத் தெரிந்தெடுக்கப்படின் உலக வங்கியின் உதவி பெறுவதற்காக அது இந்திய அரசினுல் பரிந்துரைக்கப்படும்.

(எ) சாலைகள் குறித்த அதிகாரம் இந்திய அரசிடம் நிலை பெற்றுள்ளது. எனவே, இச்செலவை மாநில அரசு பகிர்ந்து கொள்வது குறித்த வினு எழாது.

Dr. H. V. HANDE : From the answer of Hon. Minister for Public Works it looks as though it may take a long time before we are able to realise from three dimension what the Central Government would offer us or promise to offer to us. In view of the possibility of long delay, will the Government see to it that this national highway work is immediately taken up and the present defects rectified and the highway made fit for heavy traffic. There is at present heavy traffic to Coimbatore from Hosur and Krishnagiri. In view of this, will the Government start the work and see to it that it prevails upon the Central Government afterwards and see that the expenditure is debited to Central account later on?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாநில அரசைப் பொறுத்தவரையில், செய்ய வேண்டிய எல்லா வேலைகளும் செய்யப்பட்டிருக்கின்றன. மத்திய சர்க்காருக்கு உலக வங்கியிலிருந்து உதவி வரக் கூடிய குறிப்பு இருக்கிறது. மத்திய சர்க்காரையும் நாம் வற்புறுத்தியிருக்கிரேம். டெல்லிக்குச் சென்றபோது, மத்திய அமைச்சரோடு தொடர்பு கொண்டு கூறப்பட்டிருக்கிறது. இதில், மாநில அரசுக்கு உள்ள அதிகாரம் இல்லை, மத்திய சர்க்காரின் அதிகாரம்தான்.

திருமயம் தொகுதியில் அணைக்கட்டு

***23 வினு புலவர் பொ. பொன்னம்பலம்:** மாண்புமிகு போதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், திருமயம் தொகுதியில் கூடலூர் ஆறும், வெள்ளாறும் சந்திக்குமிடத்தில் பேரணை எழுப்பும் திட்டம் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) இருப்பின் என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.